13.06.2018 – அ.வ.எண்.22/2012 – பி.சா.2 -

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

நான் கிருத்துவ மதத்தை சேர்ந்தவர். ஞானஸ்தானம், திருமணம் சர்ச்சில் தான் நடந்தது. வழக்கு சொத்து 84 சென்ட் என் தாத்தா சம்பாதித்தது. கிருத்துவ வாரிசு சட்டப்படி எங்களுக்கு எவ்வளவு பங்கு என்பது தெரியாது. வாதியை தெரியும். வாதி ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறார். வா.சா.ஆ.1 ஆவணம் தேவசகாயம் தவிர நாங்கள் 4 பேர்களும் எழுதிக் கொடுத்துள்ளோம். 24.12.2011ல் ஒரு அறிவிப்பு அனுப்பினேன். அதில் முன்பணம் ரூ.1,50,000/- திருப்பிக் கொடுப்பதாக சொல்லி உள்ளேன். அந்த பணத்தை நாங்கள் தரச்சென்றால் வாதி வாங்க மறுத்துவிட்டார். அது சம்மந்தமாக அறிவிப்பு அனுப்பவில்லை. வழக்கு நிலுவையில் இருந்ததால், டி.டி.யாகவோ, காசோலையாகவோ அந்த பணத்தை அனுப்பவில்லை. நானும், இருதயமேரியும் ஒன்றாக குடியிருக்கிறோம். அதன் க.எண்.2/8 ஆகும். ஜான்பால் ஜெர்மனில் இருக்கிறார். அவர் பாதிரியாராக இருக்கிறார். 2011ல் வழக்கிறிஞருக்கு நானும், என் தாயாரும் விவரம் சொன்னோம். அதில் 3ம் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளார். இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய, 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் விவரங்கள் சொன்னோம். பிரமாண வாக்குமூலத்தில் தான் முதன் முதல் கடன் வாங்கியதாக சொன்னோம். எதிர்வழக்குரையை படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எதிர்வழக்குரையில் கடன் வாங்கியதாகத்தான் சொல்லியிருக்கிறேன். அறிவிப்பில் ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக சொல்லியிருக்கிறோம். முன்பணமாக பணம் வாங்கியதாகவும், அதை திருப்பி தருவதாகவும் அறிவிப்பில் சொல்லி

இருக்கிறோம். 5ம் பிரதிவாதி முன்சிப் கோர்ட்டில் பாக வழக்கு அ.வ.எண்.411/2011 தாக்கல் செய்திருக்கிறார். அதில் அவருக்கு 6ல் ஒரு பங்கு என தீர்ப்பானது. வா.சா.ஆ.1 ஒப்பந்தம் சென்னையில் எழுதப்பட்டது. எழுதும்போது 5ம் பிரதிவாதி உடனில்லை. வா.சா.ஆ.1 பத்திரத்தில் 2012ல் கிரைய பத்திரம் எழுதி தரவேண்டும் என்று கண்டுள்ளது. நாங்கள் கடன் தான் கேட்டோம். நான், ஜார்லசிடம் தான் கடன் கேட்டேன். ஒப்பந்தத்திற்கு ஒரு வாரம் முன்பு பேசிக்கொண்டோம். 5ம் பிரதிவாதி இருந்து தான் பேசினோம் என்றும், செண்ட் ஒன்றுக்கு ரூ.16,000/- பேசி எழுதிக்கொண்டோம், உண்மையிலேயே ஒப்பந்தம் செய்வதாக இருந்தால், செண்ட் ஒன்றுக்கு ரூ.40,000/- எழுதியிருப்போம். ஒப்பந்தம் காலத்தில் செண்ட் ரூ.40,000/- மதிப்பு பெறும் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா இந்த சொத்தை சவரியப்ப ரெட்டியாருக்கு அடமானம் போட்டுள்ளார். அடமான கடன் பத்திரம் பைசல் ஆனதற்கு சவரியப்ப ரெட்டியார் எழுதிக்கொடுத்த பத்திரம் வா.சா.ஆ.11. என் அம்மாவிடம் இருந்து 2004ல் ஒரு சொத்தை கிரையம் வாங்கியிருக்கிறேன். அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.12. அதில் கண்டுள்ள சொத்தும், என் தகப்பனார் விட்டுவிட்டு சென்ற சொத்து தான். மற்ற சகோதரர்களுடன் நான் கிரையம் வாங்கவில்லை. ஜான்பால் தவிர மற்றவர்கள் சுஜாதா என்பவருக்கு கிரையம் கொடுத்தோம். அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.13. என் அப்பா, நான், 3, 5ம் பிரதிவாதிகள் சேர்ந்து ஆண்ட்ரு என்பவருக்கு ஒரு சொத்தை கிரையம் கொடுத்தோம். அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.14. ஜான்பால் தவிர மற்றவர்கள் சேர்ந்து பட்டாபிராமன் என்பவருக்கு சொத்தை கிரையம் கொடுத்துள்ளோம். அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.15. வா.சா.ஆ.1 பத்திரத்தில் 5ம் பிரதிவாதியின் கையொப்பத்தை வாங்கி தருவதாக சொல்லியிருக்கிறோம்.

நீதிமன்றத்திலும் கடன் தொகையை கட்டவில்லை. தனியாக அதற்கான வழக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை. 08.03.2012ல் என் அம்மாவை தாக்கி காயப்படுத்தியதற்கு புகார் கொடுத்து, அதில் போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் விசாரித்து சம்பவம் நடக்கவில்லை என்று திருப்பி அனுப்பியதாக சொல்வது தெரியாது. 10.12.2012ல் தகராறு நடந்து போலிசில் புகார் கொடுத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 2011ல் கிரையம் கொடுத்ததற்காக சர்வேயர் வந்து இடத்தை அளந்தது தெரியாது. சொத்து ஒரு கோடி பெறும் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அன்றைய சந்தை நிலவரப்படி வா.சா.ஆ.1 பத்திரத்தில் கிரையத் தொகை போடப்பட்டது என்றால் சரியல்ல. அதற்காக முன்பணம் ரு.1,50,000/- வாங்கிக்கொண்டு, கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் முன்பணம் என்று எழுதப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை படித்துப் பார்த்து தான் கையெழுத்து போட்டேன். முன்பணம் என்று எழுதப்பட்டுள்ளதை ஆட்சேபனை செய்தோம். கடனாகத்தான் பணம் வாங்கியதாக அறிவிப்பு அனுப்பவில்லை. போலிசிலும் புகார் கொடுக்கவில்லை. ஒப்பந்தம் உண்மையானது என்றும், அதன்படி திருநாவுக்கரசு கிரையம் கேட்டார் என்றால் சரியல்ல. இந்த அறிவிப்பிற்கு, நிலம் எழுதி தரவேண்டும் என்று கேட்டு பதில் அனுப்பினார். அந்த அறிவிப்புக்கு முன்பும் பலமுறை நிலத்தை கேட்டார். 5ம் பிரதிவாதியின் பங்கு 6ல் ஒரு பங்கை நீக்கி தான் வழக்கு தாக்கல் செய்தோம். சங்கரிடம் நான் வாங்கிய கடனுக்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சங்கருக்கு ஒரு ஒப்பந்தம் எழுதியது உண்மை தான். அந்த ஒப்பந்தப்படி அவர் கிரையம் வாங்கவில்லை. அவர் கடனுக்காகத்தான் ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம். வாதியிடம் வாங்கிய பணத்தை தான் சங்கருக்கு திருப்பிக்கொடுத்து, அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டேன். ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது.

வாதிக்கு கொடுக்கவேண்டியது உண்மையானது என்று சொன்னால் சரியல்ல. அறிவிப்பு கொடுத்த பிறகு கற்பனை செய்து, இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.